தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1989 பிப்ரவரி 6, திங்கட்கிழமை.

தை 24, விபவ—திருவள்ளுவர் ஆண்டு 2020.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணி அளவில் மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் திரு. கே. ரமணி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் அல்லது உறுதி மொழி எடுத்துக் கொள்ளுதல்.

மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் (திரு. கே. ரமணி*) : மாண்புமிகு உறுப்பினர்களே, ஜனவரி மாதத்தில் நடைபெற்ற ஒன்பதாவது பொதுத் தேர்தலில் வெற்றிபெற்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினர்களாக வந்திருக்கும் உங்கள் அனைவரையும் பேரவையின் இந்த முதல் கூட்டத்திற்குப் பெருமகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். அமைதியாகத் தேர்தல் நடைபெறுவதற்கு ஒத்துழைத்த பொதுமக்கள் அனைவருக்கும் இம் மன்றத்தின் சார்பில் நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நாம், மக்களுக்காக அவர்களின் பிரதிநிதிகளாக அவர்களுக்குத் தொண்டாற்ற மிகப் பெரும் பொறுப்பினை ஏற்று இங்கு தேர்ந்தெடுக்கப்பட்டு வந்துள்ளோம். இதனைக் கருத்தில் கொண்டு பேரவையில் பணியாற்ற வேண்டுவது நமது கடமை என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

சிறப்புமிக்க இப்பேரவைக்கு ஒரு தலைவரை இப்பேரவை தேர்ந்தெடுக்கின்ற வரையில் செய்ய வேண்டிய முன் அலுவல்களை நிறைவேற்றுவதற்கென என்னை இப்பேரவையின் தற்காலிகத் தலைவராக ஆளுநர் அவர்கள் நியமித்திருக்கிறார்கள். அதற்கு அவருக்கு எனது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

*தற்காலிகப் பேரவைத் தலைவராக ஆளுநரால் நியமிக்கப் பெற்ற சட்டமன்றப் பேரவை உறுப்பினர் மாண்புமிகு திரு. கே ரமணி அவர்கள் 1989 ஆம் ஆண்டு, பிப்ரவரித் திங்கள் 1 ஆம் நாள் மாலை 5 மணிக்கு கிண்டியிலுள்ள ஆளுநர் மாளிகையில், ஆளுநர் முன்னிலையில் உறுதிமொழி எடுத்துக்கொண்டார்கள்.

உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் அல்லது உறுதிமொழி எடுத்துக் கொள்ளுதல்

[தற்காலிகப் பேரவைத் தலைவர்] [1989 பிப்ரவரி 6

பேரவைக்கு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நாம் இப்பேரவையின் அலுவல்களை ஏற்று நடத்துவதற்குமுன், இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி அதற்குரிய உறுதிமொழியை எடுத்துக்கொள்ள வேண்டும். அந்த உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சியை இன்று நிறைவேற்றுவதற்காக ஆளுநர் அவர்கள் என்னைப் பணித்துள்ளார்கள்.

முதலில் மாண்புமிகு முதல் அமைச்சர் மற்றும் அமைச்சர்களையும், பிறகு தேர்தல் முடிவுகள் அரசிதழில் அறிவித்துள்ளபடி, அவையின் விதிகளுக்கு ஏற்ப சட்டமன்றக் கட்சியாகத் தகுதி பெற்ற கட்சிகளின் தலைவர்களையும், பின்னர் முன்னாள் பேரவைத் தலைவர் அவர்களையும், அடுத்து முன்னாள் அமைச்சர்களையும், அதன்பின் முன்னாள் பேரவைத் துணைத் தலைவர்களையும், பிறகு மற்ற உறுப்பினர்களையும் அவர்களுடைய பெயர்களின் தமிழ் அகர வரிசைப்படி, பதவிப் பிரமாணம் அல்லது உறுதிமொழி எடுத்துக்கொள்ள சட்டமன்றப் பேரவைச் செயலாளர் அழைப்பார். அவ்வாறு அழைக்கப் பெற்றவுடன் ஒவ்வொருவராக வந்து தங்கள் தேர்வுக்கான சான்றிதழைச் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் கொடுக்க வேண்டும்.

உறுதிமொழி எடுத்துக்கொள்வதற்கான வாசகங்கள் அடங்கிய இதழ் உறுப்பினர்களுக்கு அளிக்கப்படும்; அதில் ''உளமார உறுதி கூறுகிறேன்'' என்றும் ''கடவுளறிய உறுதி கூறுகிறேன்'' என்றும் இரண்டு வாசகங்கள் இருக்கும். அவரவர் விருப்பப்படி ஏதாவது ஒரு முறையில் உறுதிமொழி எடுத்துக்கொள்ளலாம். மேலும் இந்த இதழ் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் இருக்கும். மாண்புமிகு உறுப்பினர்கள் தம் விருப்பப்படி ஏதாவது ஒரு மொழியில் (அதாவது தமிழ் அல்லது ஆங்கிலத்தில்) உறுதிமொழி எடுத்துக் கொள்ளலாம். உறுதிமொழி எடுத்துக் கொள்ளும்போது கொடுக்கப்படும் இதழில் உள்ள வாசகங்களை மட்டுமே படிக்க வேண்டும். அதைக் கூட்டவோ குறைக்கவோ கூடாது.

உறுதிமொழி எடுத்துக்கொண்டபின் உறுப்பினர்கள் அந்தப் படிவத்தில் கையெழுத்திட்டு செயலாளரிடம் கொடுக்க வேண்டும். அதற்குப் பிறகு இங்கு வைக்கப்பட்டுள்ள ''உறுப்பினர் பதிவேட்டில்'' கையொப்பம் இடுதல் வேண்டும்.

அரசியல் அமைப்புச் சட்டப்படி எடுக்கப்படவேண்டிய உறுதிமொழியை நான் ஏற்கெனவே 1–2–1989 அன்று ஆளுநர் முன்னிலையில் எடுத்துக்கொண்டுவிட்டதால், இப்போது நான் முதலில் '' உறுப்பினர் பதிவேட்டில்'' விதிகளில் குறித்துள்ளபடி அவைச் செயலாளர் முன்னிலையில் கையெழுத்திடுகிறேன். (கையெழுத்திட்டார்).

1989 பிப்ரவரி 6] [தற்காலிகப் பேரவைத் தலைவர்]

உறுதிமொழி எடுக்கும் கடமை மிகவும் புனிதமானது. எனவே, உறுதிமொழி எடுக்கும் நிகழ்ச்சி முழுவதும் நிறைவேறும் வரை எல்லா உறுப்பினர்களும் பேரவையில் அமைதியாக அமர்ந்து இருக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது மாண்புமிகு அமைச்சர்களைத் தவிர மற்ற உறுப்பினர்களுக்குப் பேரவையில் அமருவதற்குத் தனி இடம் ஒதுக்கப் படவில்லை. விரைவில் தேர்ந்தெடுக்கப்பட இருக்கிற பேரவைத் தலைவர் அவர்கள், பேரவை விதிகளின்படி உறுப்பினர்களுக்கு இடங்களை ஒதுக்கித் தருவார்கள்.

நாளை மறுநாள், அதாவது 8–2–1989 அன்று பேரவைத் தலைவர், பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்கள் இப் பேரவையில் நடைபெறும். அதற்கான வேட்புத் தாள்களை நாளை நண்பகல் 12 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். சட்டமன்றப் பேரவை விதிகளின்படி பேரவைத் தலைவர், துணைத் தலைவர் தேர்தலில் கலந்துகொள்ளும் வேட்பாளர்களும், அவர்களை முன்மொழிபவர்களும், வழி மொழிபவர்களும் உறுதிமொழி எடுத்திருக்க வேண்டும்.

இப்போது செயலாளர் உறுதிமொழி எடுத்துக்கொள் வதற்கு உறுப்பினர்களை அவர்களது பெயர்களைச் சொல்லி அழைப்பார்.

(பின்னர், செயலாளர் அவர்கள் உறுப்பினர்களை உறுதிமொழி எடுத்துக்கொள்ளும்படி அழைத்தார்கள்.)

கீழ்க்கண்ட உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக்கொண்டார்**கள்:**

1 மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி
2 மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்,
3 மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா,
4 மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்,
5 மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்,
6 மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி,
7 மாண்புமிகு திரு. கோ. சி. மணி,
8 மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி,
9 மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்,
10 மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்,
11 மாண்புமிகு திரு. துரைமுருகன்,
12 மாண்புமிகு திருமதி. சுப்புலட்சுமி செகதீசன்,
13 மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்,
14 மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி.
15 மாண்புமிகு திரு. கே. என். நேரு,
16 மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்,
17 மாண்புமிகு திரு. ச. தங்கவேலு,
18 செல்வி ஜெ. ஜெயலலிதா,
19 *திரு. ஜி. கருப்பையா மூப்பனார்,

20 *திரு. பி. எச். பாண்டியன்,
21 திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்,
22 திரு. எஸ். திருநாவுக்கரசு,
23 *திரு. கோ. பூவராகன்,
24 திரு. என். கணபதி,
25 திரு. பெ. சீனிவாசன்,
26 திரு. கே. அங்கமுத்து,
27 திரு. ஜெ. அசேன்,
28 திரு. கே. அண்ணாதுரை,
29 திரு. கே. அண்ணாதுரை,
30 திரு. ஆர். அண்ணா நம்பி,
31 திரு. எம். அண்ணாமலை,
32 திரு. ஆ. அதியமான்,
33 *திரு. எம். அப்துல் லத்தீப்,
34 *திரு. பா. அப்துல்சமத்,
35 திரு. கே. அர்ஜுனன்,
36 திரு. சோ. அழகர்சாமி,
37 திரு. ச. அழகுவேலு,
38 * திரு. ஆ. அறிவழகன்,
39 திரு. வ. அன்பழகன்,
40 திரு. அன்பில் பொய்யாமொழி,
41 திரு. பெ. ஆசையன்,
42 *திரு. மெ. ஆண்டி அம்பலம்,
43 திரு. த. ஆறுமுகம்,
44 திரு. அ. இரகுமான்கான்,
45 திரு. வி. பி. இராசன்,
46 திரு. இரெ. இராசமாணிக்கம்,
47 *திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம்,
48 திரு. வி. கே. இராசு,
49 திரு. வெ. இராசு,
50 திரு. டி. இராதாகிருஷ்ணன்,
51 திரு. நா. இராமகிருஷ்ணன்,
52 திரு. எம். இராமச்சந்திரன்,
53 திரு. ந. இராமச்சந்திரன்,
54 திரு. ஏ. எம். இராமசாமி,
55 திரு. கே. வி. இராமசாமி,
56 திரு. வி. இராமசாமி,
57 திரு. கே. ஆர். இராமசாமி,
58 திரு. மு. இராமநாதன்,
59 திரு. செ. இராமலிங்கம்,
60 திரு. அ. இராசேந்திரன்,
61 திரு. கே. ஆர். இராஜேந்திரன்,
62 திரு. இளம் வழுதி,
63 *திரு. ஆர். ஈஸ்வரன்,
64 திரு. எஸ். டி. உகம்சந்த்,
65 திரு. தா. உதயசூரியன்,
66 திரு. எஸ். என். எம். உபயதுல்லா,

67 திரு. ஆர். எட்டியப்பன்.
68 *திரு. எ. ஏகாம்பர ரெட்டி.
69 திரு. எஸ். பி. கண்ணன்.
70 திரு. க. சொ. கணேசன்.
71 திரு. எல். கணேசன்.
72 திரு. சா. கணேசன்.
73 திரு. ஏ. கணேசமூர்த்தி.
74 திரு. என். கணேசமூர்த்தி.
75 திரு. வே. கணேசன்.
76 திரு. கே. கந்தசாமி.
77 *திரு. எம். கே. கரீம்.
78 திரு. எஸ். எஸ். கருப்பசாமி.
79 *திரு. க. கன்னையன்.
80 திரு. டி. ஆர். கஜபதி.
81 டாக்டர் க. காஞ்சனா.
82 திரு. காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி.
83 திரு. பி. காளியப்பன்.
84 திரு. சி. கிருஷ்ணன்.
85 டாக்டர் து. கிருஷ்ணமூர்த்தி.
86 திரு. எஸ். குணசேகரன்.
87 திரு. குமரி அனந்தன்.
88 திரு. சு. குருநாதன்.
89 *திரு. ஜி. ஜி. குருமூர்த்தி.
90 திரு. ஏ. கோதண்டம்.
91 *திரு. வெ. கோபாலகிருஷ்ணன்.
92 திரு. வெ. கோவிந்தன்.
93 திரு. சி. கோவிந்தசாமி.
94 திரு. வி. சி. கோவிந்தசாமி.
95 திரு. சி. கோவிந்தராஜன்.
96 திரு. சி. சண்முகம்.
97 திரு. வி. பி. சந்திரசேகர்.
98 திரு. சம்சுதீன் என்கிற கதிரவன்.
99 திரு. ஏ. ஜி. சம்பத்.
100 திருமதி எஸ். பி. சற்குணம்.
101 டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன்.
102 டாக்டர் த. சாந்தகுமாரி.
103 திரு. ஆர். சாமிநாதன்.
104 * திரு. ஆர். சிங்காரம்.
105 திரு. சா. சிவசுப்பிரமணியன்.
106 திரு. எஸ். ஆர். சிவலிங்கம்.
107 திரு. எஸ். சிவலோகம்.
108 திரு. ரா. சின்னசாமி.
109 திரு. கே. சின்னசாமி.
110 திரு. வி. கே. சின்னசாமி.
111 திரு. எம். சீரங்கன்.
112 திரு. கே. சுந்தர்.
113 திரு. க. சுந்தரம்.
114 திரு. கே. ஆர். சுந்தரம்.

115 திரு. ப. சுந்தரம்.
116 *திரு. மா. சுந்தரதாஸ்.
117 திரு. ஏ. சுப்பு.
118 *டாக்டர் எஸ். சுந்தரராஜ்.
119 திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை.
120 திரு. தா. க. சுப்பிரமணியம்.
121 திரு. வே. நா. சுப்பிரமணியன்.
122 திரு அ. லெ. சுப்பிரமணியன்.
123 திரு. வ. சுப்பையா.
124 திரு. ஏ. செங்குட்டுவன்.
125 திரு. கே. ஏ. செங்கோட்டையன்.
126 திரு. செங்கை சிவம்.
127 திரு. எம். சேட்டு.
128 திரு. ந. சௌந்திரபாண்டியன்.
129 *திரு. எஸ். டேனியல்ராஜ்.
130 திரு. அ. தங்கம்.
131 திரு. வே. தங்கபாண்டியன்.
132 திரு. எம். தங்கவேல்.
133 திரு. என். தங்கவேல்.
134 திரு. எஸ். ஏ. தங்கராஜன்.
135 *திரு. ஏ. தங்கராஜு.
136 திரு. வி. தம்புசாமி.
137 திரு. வீ. தமிழ்மணி.
138 திரு. ஏ. சி. தயாளன்.
139 திரு. கே. ஆர். ஜி. தனபாலன்.
140 திரு. வி. தனராஜ்.
141 டாக்டர் து. திருமூர்த்தி.
142 திரு. பெ. சு. திருவேங்கடம்.
143 திரு. துரை சந்திரசேகரன்.
144 திரு. துரை ராமசாமி.
145 திரு. பெ. துரைபாண்டி.
146 திரு. எஸ். எஸ். தென்னரசு.
147 திரு. வி. எம். தேவராஜ்.
148 திரு. ந. நஞ்சப்பன்.
149 திரு. ஆ. நடராசன்.
150 திரு. பொ. நடராசன்.
151 *திரு. ஆர். நடேசன்.
152 திரு. எகால் மு. நடேச உடையார்.
153 டாக்டர் கோ. நந்தகோபாலகிருட்டிணன்.
154 திரு. ராம. நாராயணன்.
155 திரு. செ. நூர்முகமது.
156 திரு. ஆர். பஞ்சாட்சரம்.
157 திரு. ஜி. பழனிச்சாமி.
158 திரு. டி. கே. பழனிச்சாமி.
159 திரு. க. பழனிசுவாமி.
160 திரு. என். பழனிவேல்.
161 திரு. மா. பன்னீர்செல்வம்.

1989 பிப்ரவரி 6]

162 திரு. அ. பாப்பா சுந்தரம்.
163 திருமதி பாப்பா உமாநாத்.
164 திரு. எஸ். பால்ராஜ்.
165 திரு. அ. வே. பாலசுப்பிரமணியன்.
166 *திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்.
167 *திரு. ஆ. பாலையா.
168 திரு. கே. பிச்சாண்டி.
169 திரு. ரெ. பிச்சைமுத்து.
170 *திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்.
171 திரு. இ. புகழேந்தி.
172 திரு. என். பெரியசாமி.
173 திரு. வே. பெரியசாமி.
174 திரு. ஐ. பெரியசாமி
175 திரு. அ. பெரியண்ணன்.
176 திரு. செ. பெருமாள்.
177 திரு. டி. பொன்முடி.
178 *திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.
179 திரு. ஜி. பொன்னுபிள்ளை.
180 திரு. ஆர். மகேந்திரன்.
181 *திரு. கே. ஏ. மணி.
182 திரு. ஆச்சியூர் எம். மணி.
183 திரு. மா. மணிமாறன்.
184 திரு. இரா. மதிவாணன்.
185 திரு. அ. மலர் மன்னன்.
186 திரு. பா. மனோகரன்.
187 டாக்டர் சி. ரா. மாசிலாமணி.
188 திரு. தி. ரா. மாசிலாமணி.
189 திரு. கொ. மாதப்பன்.
190 திரு. பி. மாரப்பன்.
191 திரு. அ. மாரிமுத்து.
192 *திரு. எம். முகமது சித்திக்.
193 திரு. ப. முத்துசாமி.
194 திரு. எம். முத்தையன்.
195 திரு. எம். முத்தையா.
196 திரு. பொ. முருகேசன்.
197 திரு. வ. முல்லைவேந்தன்.
198 திரு. ஆ. மு. முனிரத்தினம்.
199 திரு. எஸ். ஆர். முனிரத்தினம்.
200 திரு. ஆர். மூக்கன்.
201 திரு. எல். மூக்கையா.
202 திரு. இரா. மோகன்.
203 *திரு. எம். மோசஸ்.
204 திருமதி யசோதா செல்லப்பா.
205 *திருமதி ரமணி நல்லதம்பி.
206 திரு. சி. ராமச்சந்திரன்.
207 திரு. கே. ராமச்சந்திரன்.
208 **திரு. ந. ராமச்சந்திர ரெட்டி.

209 திரு. மொஞ்சனூர் ப. ராமசாமி.
210 * திரு. எஸ். எஸ். ராமசுப்பு.
211 * திரு. ரவி அருணன்.
212 திரு. எம். எஸ். கே. ராஜேந்திரன்,
213 *திரு. எச். எம். ராஜு.
214 திருமதி பி. லட்சுமி.
215 திரு. உ.ரா. வரதராஜன்.
216 திரு. ஆர். வரதராசன்.
217 *திரு. பி. என். வல்லரசு.
218 *திரு. பொன், விஜயராகவன்.
219 **திரு. டி. சி. விஜயேந்திரையா.
220 திரு. கோ. வீரையன்.
221 திரு. பெ. வெங்கடாசலம்.
222 *திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்.
223 திரு. யூ. கே. வெள்ளிங்கிரி.
224 திரு. கி. வேணு.
225 திரு. மீ. அ. வைத்தியலிங்கம்.
226 திரு. மு. க. ஸ்டாலின்.
227 *திரு. அ. மு. ஹமீது இப்ராகிம்.
228 திரு. ஆர். எஸ். ஸ்ரீதர்.
229 **திரு. ஆஸ்கார் சி. நிக்லி.

மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் (திரு. கே. ரமணி) : மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டு விட்டார்கள் என்று கருதுகிறேன். நாளை பேரவைக் கூட்டம் இல்லை. நாளை மறுநாள் பேரவைத் தலைவர், துணைத் தலைவர் தேர்தல்கள் நடைபெறும் என்பதையும், அதற்கான வேட்பு மனுக்கள் நாளை நண்பகல் 12.00 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதையும் மீண்டும் நினைவுபடுத்துகிறேன்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை மறுநாள் (8–2–1989) காலை 10.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 1.17 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

2. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்

ஏதும் இல்லை.

---

* கடவுள் பெயரால் உறுதிமொழி எடுத்துக்கொண்ட உறுப்பினர்கள்.

** ஆங்கிலத்தில் உறுதிமொழி எடுத்துக் கொண்ட உறுப்பினர்கள்.